# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

கலைப்பீட இரண்டாம் வருட இறுதிப்பரீட்சை – 2016/2017

(இரண்டாம் பருவ முடிவு)

## ECN 2214– வங்கியியல் தத்துவங்களும் நடைமுறைகளும்

நேரம்: 2 மணித்தியாலம்

நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

**வினா இலக்கம் 01**

(a) நிதி முறைமையின் (Financial System) பிரதான தொழிற்பாடுகளை விளக்குக. பொருளாதார முகாமைத்துவத்தின் மீதான அத் தொழிற்பாடுகளின் முக்கியத்துவத்தை விமர்சன ரீதியாக பரிசீலிக்குக. (09 புள்ளி)

(b) இலங்கை நிதி முறைமையில் நீர் அவதானித்த வெவ்வேறு வகையான நிதி நிறுவனங்களை (Financial Institutions) விளக்குக. (06 புள்ளி)

**வினா இலக்கம் 02**

(a) "சந்தை பூரணத்துவமின்மையை குறைப்பதில் நிதி இடைத்தரகர்களின் நிலவுகை முக்கியமாகும்" இக்கூற்றினை விமர்சன ரீதியாக விளக்குக. (08 புள்ளி)

(b) நிதி இடைத்தரகர்கள் வெவ்வேறு வகையான நிதி மாற்றல்களை (Financial Transformations) மேற்கொள்கிறார்கள். நீர் கற்ற நான்கு வகையான நிதி மாற்றல்களை விளக்குக. (07 புள்ளி)

**வினா இலக்கம் 03**

(a) "நிதி இடைத்தரகர்கள் இல்லாவிடின் ஒரு குறைந்த பரிமாற்றல் செலவு (A lower Transaction Cost) சாத்தியமில்லை". இக்கூற்றினை விளக்குக. (08 புள்ளி)

(b) நிதி நிறுவனங்கள் எவ்வாறு பரிமாற்றல் செலவினங்களை (Transaction Costs) குறைக்க முடியும். (07 புள்ளி)

**வினா இலக்கம் 04**

(a) வணிக வங்கிகளின் (Commercial Banks) பிரதான தொழிற்பாடுகளை சுருக்கமாக கருத்துரைக்குக. (05 புள்ளி)

(b) வங்கி முறைமையில் ஒதுக்குகளை அதிகரித்தல் வைப்பாக்கத்திற்கு (Deposit Creation) வழிவகுக்கும். உமது சொந்த உதாரணத்தை பயன்படுத்தி இக்கூற்றினை விமர்சன ரீதியாக பரிசீலிக்குக. (10 புள்ளி)

**வினா இலக்கம் 05**

(a) கடந்த சில தசாப்தங்களில் இலாபத்தன்மை மற்றும் வாடிக்கையாளர் நலன்களை அதிகரிக்க வணிக வங்கிகள் வழங்கிய வேறுபட்ட வாடிக்கையாளர் சேவைகளை விளக்குக. (07 புள்ளி)

(b) இலங்கையில் வணிக நிறுவனங்களின் (Business Institutions) வெளியக நிதிகளின் (External funds) மிக முக்கியமான மூலம் வங்கிக் கடன்களாகும். நீர் உடன்படுகிறீரா? (08 புள்ளி)

**வினா இலக்கம் 06**

(a) நீர் ஒரு காசோலையை (Cheque) எவ்வாறு வரையறுப்பீர்? (03 புள்ளி)

(b) திறந்த மற்றும் குறுக்கு கோடிட்ட (Opened and crossed) காசோலைகளுக்கிடையிலான வேறுபாட்டினை விபரிக்குக. (06 புள்ளி)

(c) காசோலை கொடுப்பனவின் ஊடாக பரிமாற்றல்களை மேற்கொள்ளும் போது ஏற்படும் அனுகூலங்கள் எவை? (09 புள்ளி)

**வினா இலக்கம் 07**

பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றினை சுருக்கமாக விபரிக்குக.

(a) நிதி பரிமாற்றல்களில் தீங்கு தேர்வு பிரச்சினை (Adverse selection problem)

(b) வைப்பினை ஏற்கும் நிறுவனங்கள் (Deposit Taking Institutions)

(c) வங்கியியல் மேற்பார்வையின் மீதான பாசல் குழு (BCBS)

(d) வதிவிடம் அல்லாதவர்களினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நாணய கணக்குகள் (NRFC)

(e) எடுத்து வருபவர் காசோலை (Bearer cheque)

(f) இலத்திரனியல் வங்கியியல் (Digital Banking)

(ஒவ்வொன்றிற்கும் 05 புள்ளி)

*******